**சுருக்கம்**

வேளாண்மை – உழவர் நலன் – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளம் வேளாண் அறிவியலில் பயிர்ப்பெருக்கம் மற்றும் மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெற்று முன்னிலை பெறும் மாணவருக்கு "டாக்டர்.எம்.எஸ்.சுவாமிநாதன் அறநல்கை விருது" ஆண்டுதோறும் வழங்குதல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (ப.க) துறை**

அரசாணை (நிலை) எண். 249

நாள்: 18.11.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054,
சோபகிருது வருடம்,
கார்த்திகைத் திங்கள் – 2 ஆம் நாள்

படிக்க-

பதிவாளர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடித எண்.த.வே.ப.க/பதிவாளர்/டாக்டர். எம். எஸ். சுவாமிநாதன் விருது/ இளங்கலை /2023, நாள் 13.10.2023.

*****

**ஆணை:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வேளாண் விஞ்ஞானி டாக்டர்.எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையில், 11.10.2023 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில், சட்டப்பேரவை விதி எண்.110-ன்கீழ் இன்னபிறவற்றுடன், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள் :-

"தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளம் வேளாண் அறிவியலில் பயிர்ப்பெருக்கம் மற்றும் மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெற்று முன்னிலை பெறும் மாணவருக்கு டாக்டர்.எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்".

2. மேற்காணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், கீழ்க்காணும் முன்மொழிவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்:-

- இந்தியாவில் வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வியை வழங்கும் சிறந்த வேளாண் பல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் ஒன்றாகும். இப்பல்கலைக்கழகம் இதுவரை 900-க்கும் மேற்பட்ட இரகங்கள் மற்றும் கலப்பினங்களை உழவர் நலனுக்காக வெளியிட்டுள்ளது. தாவர இனப்பெருக்கம் மற்றும் அதன் நுட்பங்களைச் செயலாக்குதல் மனித குலத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்நோக்கமானது பொருளாதார ரீதியிலும் சுகாதாரத்தின் அடிப்படையிலும் நிறைவேற்றப்படுவது விரும்பத்தக்க ஒன்றாகும்;

- அவ்வழியில் பயணித்த டாக்டர்.எம்.எஸ்.சுவாமிநாதன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் புகழ் பெற்ற முன்னாள் மாணவர் ஆவார். இந்திய வேளாண் முன்னேற்ற வரலாற்றில் டாக்டர்.எம்.எஸ்.சுவாமிநாதன் ஒரு முக்கிய நபராக பரிமளிக்கிறார். இவர் ஒரு மரபணுவியலாளர், தாவர வளர்ப்பாளர் மற்றும் ஒரு சிறந்த வேளாண் நிர்வாகி. நாட்டின் வேளாண் துறையில் அவர் ஆற்றிய கணிசமான பங்களிப்புகளுக்காக அவர் "பசுமைப் புரட்சியின் தந்தை" என்றழைக்கப்படுகிறார்;

- நார்மன் போர்லாக் அவருடன் இணைந்து அறிமுகப்படுத்திய குட்டை இன அதிக மகசூல் தரும் கோதுமை வகைகள், குட்டை இன நெல் இரகங்கள், இந்தியாவின் உணவு தன்னிறைவு பெறுவதற்கும் உழவர்களின் நல்வாழ்விற்கும் ஒரு நிலையான தீர்வை தந்தார். 1960-களில் நாடு பஞ்சத்தை நோக்கி இருந்த போது அதிக விளைச்சல் தரும் கோதுமை மற்றும் நெல் வகைகளை இந்தியாவில் அறிமுகப்படுத்தியதற்காக "முதல் உலக உணவுப் பரிசு" பெற்றார்;

- டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுக்கு பத்மஸ்ரீ, பத்மபூஷன், பத்மவிபூஷன் உள்ளிட்ட உயரிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, டாக்டர்.எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் பெயரில் இளங்கலைப் படிப்பில் மரபியல் மற்றும் தாவர இனப்பெருக்கப் படிப்புகளில் சிறந்து விளங்கும் மாணவருக்கு விருது வழங்கப்படுவது ஒரு தலைச்சிறந்த வேளாண் விஞ்ஞானிக்கு கொடுக்கப்படும் உரிய அங்கீகாரமாகும்;
- இதன் பொருட்டு அவரை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு அரசானது "டாக்டர்.எம்.எஸ்.சுவாமிநாதன் விருது" எனும் பெயரில் அறநல்கை விருதை உருவாக்கிப் பெருமைப்படுகிறது. இவ்விருதின் பெயரில் பணப்பரிசாக ரூபாய் ஐம்பதாயிரமும் (ரூ.50,000/-), அதனுடன் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும். இதனை செயலாக்கும் பொருட்டு ரூபாய் பத்து இலட்சமானது (ரூ.10,00,000/-) "பட்டமளிப்பு அறநல்கை கணக்கு" இருப்பில் வைப்புத் தொகையாக செலுத்தப்படும். இந்த வைப்புத்தொகையின் மூலம் பெறப்படும் வட்டியானது விருது வழங்குவதற்காக பயன்படுத்தப்படும்.

3. மேற்காணும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளரது கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளம் வேளாண் அறிவியலில் பயிர்ப்பெருக்கம் மற்றும் மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெற்று முன்னிலை பெறும் மாணவருக்கு "டாக்டர்.எம்.எஸ்.சுவாமிநாதன் அறநல்கை விருது" ஆண்டுதோறும் வழங்குவதற்கும், அவ்விருதின் பெயரில் பணப்பரிசாக ரூபாய் ஐம்பதாயிரமும் (ரூ.50,000/-), அதனுடன் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழும் வழங்கவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளருக்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், இதனை செயலாக்கும் பொருட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு மூலதன வைப்பு நிதியாக ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் மற்றும் அத்தொகையினை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி கழகத்தில் வைப்பு நிதியாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முதலீடு செய்து, அதன்மூலம் பெறப்படும் வட்டித்

..4..

தொகையிலிருந்து இந்த விருதானது வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது. இவ்விருதினை வழங்குவதற்கான "வழிகாட்டுமுறைகள்" குறித்து தனியே ஆணைகள் வெளியிடப்படும்.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2415-வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும் – 01 பயிர் வளர்ப்பு – 120 ஏனைய நிறுவனங்களுக்கு நிதி உதவி – மாநில செலவினங்கள் – AB தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு உதவித் தொகை – 309 உதவித் தொகை -03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை".

(IFHRMS DPC : 2415 01 120 AB 309 03)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.10,00,000/-ம் வரும் 2023-2024 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இருப்பினும், சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி (SI) இச்செலவினத்தை 2023-2024ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2023-24ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு /இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2023-24) சேர்க்கத்தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதித் (வரவு செலவு பொது-I /வேளாண்மை மற்றும் உழவர் நலன்) துறைக்கு அனுப்புமாறு வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கிட வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

7. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் அவர்கள் மேலே பத்தி 3-ல் உள்ள ஆணைப்படி தக்க நடவடிக்கை மேற்கொண்டு அவ்விவரத்தினை அரசுக்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண். 310 / ADS (GKT) / 2023, நாள். 16.11.2023 மற்றும் கூடுதல் நிதிஒதுக்கப் பேரேடு எண்.1304, ASL No. 1304 (ஆயிரத்து முன்னூற்று நான்கு) (IFHRMS ASL No. 2023111304)

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003.
ஆணையர், வேளாண்மைத்துறை, சென்னை- 600 005.
வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர்-641 003.
முதன்மை மாநிலக் கணக்காயர் (G&SSA/ E&RSA), சென்னை-600 018
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர்-641 018.
துணை இயக்குநர், உள் தணிக்கை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்- 641 003.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநிலக் கணக்காயர் அலுவலகம், சென்னை-600 009.

நகல்:-

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத்துறை, சென்னை-600 009.
நிதித் (வேளாண்மை - உ ந /வ.செ.பொ.I/2/வ.வ.I) துறை, சென்னை-600 009.
வேளாண்மை – உழவர் நலத் (அ.ந.மு.3 /வ(ம)தி) துறை, சென்னை-600 009.
கோ.எண்.3058/பக/2023.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அ. திவாணா
18/11/2023

பிரிவு அலுவலர்

18/11/2023